# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 107/மா/2017

ஆணை எண். 97/2017

நாள் : 05/05/2017

திருமதி அ. சகுந்தலா,
தூத்துக்குடி – 628 001. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தூத்துக்குடி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாநகராட்சி, சேது ராஜா தெரு, எண்.121-A, முகவரியில் வசிக்கும் திருமதி A. சகுந்தலா அவர்களது முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 17.04.2017 அன்று பெறப்பட்டு, 107/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவின் மீது கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

தூத்துக்குடி மாநகராட்சி, சேது ராஜா தெரு, எண்.121-A, முகவரியில் வசிக்கும் திருமதி A. சகுந்தலா என்பவர், காலம் சென்ற தனது கணவர் T. ஆறுமுகம் அவர்களது பணிவிவரங்களை வழங்கக்கோரி தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பத்திருந்தார். உரிய விவரங்களை வழங்க மாநகராட்சி ஆணையர் காலம் தாழ்த்திய நிலையில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்தார். மனுதாரர் கோரிய பணிவிவரங்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை, 20 நாட்களுக்குள் அனுப்பி வைக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 18.04.2017 நாளிட்ட கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்பட்டார். மேற்குறிப்பிட்ட கடிதத்தினைப் பெற்ற சில நாட்களிலேயே, மாநகராட்சி ஆணையர் மனுதாரர் கோரிய விவரங்களை தனது 26.04.2017 நாளிட்ட கடிதத்தில் வழங்கியுள்ளார். மனுதாரரும், தான் கோரிய விவரங்களை மாநகராட்சி வழங்கியுள்ளதாக இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

2. காலம் சென்ற திரு T. ஆறுமுகம் தூத்துக்குடி மாநகராட்சியின் முன்னாள் பணியாளர். இந்நேர்வின் முறையீட்டு மனுதாரரான திருமதி A.சகுந்தலா தனது கணவரது பணி விவரங்களை மாநகராட்சியிடமிருந்து பெறமுடியாத நிலையிலேயே இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்திருந்தார். இதுபோன்ற நேர்வுகளில் மாநகராட்சி காலம் தாழ்த்துவது முறையல்ல. பொதுமக்கள் தங்களது அடிப்படைத் தேவைகள் அனைத்திற்கும் தற்போது உள்ளாட்சி அமைப்புகளையே அணுகும்நிலை உள்ளது. இந்நிலையில் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கை மனுக்களில் தீர்வுகாணும் பொருட்டு உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அலுவலர்கள் கடமையுணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும் செயலாற்ற வேண்டுமென அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 5–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

8.5.17

8/5/17

பெறுநர்

திருமதி அ. சகுந்தலா,
தூத்துக்குடி – 628 001.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்